வெற்றிடங்கள்

திட்ட ஊழியரை ஆட்சேர்ப்பு செய்தல்

வர்த்தக கமத்தொழில் அபிவிருத்தி (CAD)

மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டுச் செயற்திட்டம் - கட்டம் II

(செயற்திட்டக் காலப்பகுதி - 2026-2031)

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள, மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டுச் செயற்திட்டம் (MWSIP) – கட்டம் II இன் வர்த்தக கமத்தொழில் அபிவிருத்திக்காக (CAD) 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை (MSD) மற்றும் அரசாங்க வேலைக்கமர்த்துதல் நடைமுறைகளின் பிரகாரம், பின்வரும் பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் திட்ட ஊழியரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகுதியும் அர்ப்பணிப்புமுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **செயற்திட்டத்தின் மொத்தச் செலவானது,** உள்நாட்டு மூலதனங்களின் பங்களிப்புடன் **USD 536.5 மில்லியன்** ஆகும்.

2026-03-28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள (MSD) சுற்றறிக்கையின் 02ஆவது பின்னிணைப்பு மற்றும் 10/2025ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை ஆகியவற்றில் பதவியின் சம்பளம் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

வெற்றிடங்களின் விபரங்கள் - வர்த்தக கமத்தொழில் அபிவிருத்திச் செயற்திட்டம்

இல.	விபரக்குறிப்பு / வேலை அமைவிடம்	சம்பள அளவுத்திட்டம்	பதவி எண்ணிக்கை
1	கிராமிய கடன்சார் நிபுணர் (Rural Credit Specialist)	வகைப்பாடு C	01
2	சிவில் பொறியியல் நிபுணர் (Civil Engineering Specialist)		01
3	பாலின, இளைஞர், GRM மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் (Gender, Youth, GRM and Social Safeguards Officer)	வகைப்பாடு E	01
4	பயிற்சியளிக்கும் உத்தியோகத்தர் (Training Officer)		01
5	தொடர்பாடல் உத்தியோகத்தர் (Communication Officer)		01
6	சுற்றாடல் உத்தியோகத்தர் (Environmental Officer)		01
7	மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு உத்தியோகத்தர் (Monitoring & Evaluation Officer)		01

வெற்றிடங்கள் - மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டுச் செயற்திட்டம் (MWSIP) - கட்டம் II திட்டம்

குறி. இல.	பதவி	சம்பள அளவுத்திட்டம்	வேலை இடம்	பதவி எண்ணிக்கை
1	சாரதி	PL - 3	செயற்திட்ட நடைமுறைப்படுத்தல் பிரிவு - மடதுகம	01
			செயற்திட்ட நடைமுறைப்படுத்தல் பிரிவு – மொரகஹகந்த	02

பொருந்தக்கூடிய சுற்றறிக்கை:

- வகைப்பாடு C – E சம்பள அளவுத்திட்டத்திற்கு 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை (MSD)
- உதவி ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு 10/2025ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை.

  (உதவி ஊழியர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது அரசாங்க ஆட்சேர்ப்பு செய்தல் நடைமுறைகள் கருத்திற்கொள்ளப்படும்.)

விண்ணப்பதாரர்கள் 64 வயதிற்குக் கீழ் இருத்தல் வேண்டும். ஆங்கில மொழியில் புலமை, அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குவிதிமுறைகளில் பரிச்சயம் மற்றும் கணினி அறிவு என்பன அத்தியாவசிய தேவைப்பாடுகள் ஆகும். இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு-நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் முன்னைய அனுபவம் இருத்தல் கூடுதல் நன்மையாகக் கருதப்படும். அரசாங்க சேவையில் தற்போது வேலையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு, *https://mwsip.lk/careers/* எனும் வலைத்தளத்தினைப் பார்வையிடவும்.

(மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையினைப் பார்வையிட தயவுசெய்து நிதி அமைச்சின் வலைத்தளத்தைப் பார்வையிடவும்.)

கீழுள்ள முகவரியைச் சென்றடையும் வகையில் **2026-12-04ஆம் திகதியன்று** அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக பதிவுத்தபாலில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியானது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

திட்டப் பணிப்பாளர்,
மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டுச் செயற்திட்டம் (MWSIP) - கட்டம் II திட்டம்
(மனித வள முகாமைத்துவப் பிரிவு)
இல. 493/1/1,
டி.பி. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஏதேனுமொரு வகையில் செல்வாக்குச் செலுத்த முயல்வது தகுதியீனத்திற்கு வழிவகுப்பதுடன் அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்ட விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

திட்டப் பணிப்பாளர்,
மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டுச் செயற்திட்டம் (MWSIP) – கட்டம் II திட்டம்

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED